**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை : செல்வி.S.அபூர்வா, B.A., L.L.B,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**பழனி.**

**2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், 03–ஆம் தேதி, திங்கள்கிழமை**

**அ.வ.எண்.14/2025**

**(CNR No. TNDG08-000020-2025)**

***********

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், காரத்தொழுவு அஞ்சல், கள்ளிமேடு கதவு எண்.149/5 என்ற முகவரியில் வசிக்கும் ரங்கத்தேவர் மகன் சுமார் 44 வயதுள்ள R.ரங்கநாயகம். ....வாதி

/எதிர்/

1.திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கொக்கரக்கல் வலசு கிராமம், வீரமாத்தியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் கந்தசாமி மகன் சுமார் 52 வயதுள்ள தங்கவேல்.

2.திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கொக்கரக்கல் வலசு கிராமம், வீரமாத்தியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் தங்கவேல் மகன் சுமார் 28 வயதுள்ள கந்தசாமி.

3.திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கொக்கரக்கல் வலசு கிராமம், வீரமாத்தியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் தங்கவேல் மகன் சுமார் 26 வயதுள்ள கருப்புசாமி.

4.திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கொக்கரக்கல் வலசு கிராமம், வீரமாத்தியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் தங்கவேல் மகன் சுமார் 25 வயதுள்ள கார்த்தி. ....பிரதிவாதிகள்

வாதிக்கு பாத்தியப்பட்டு வாதியின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வரும் தாவா சொத்துக்களில் பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, உள்ளீட்டார்களோ எவ்விதத்திலும் தாவா சொத்துக்களில் அத்துமீறி நுழையவோ, ஆக்கிரமிப்பு செய்யவோ, வாதியின் சுவாதீன அனுபவத்திற்கு எவ்வித இடையூறும்

செய்யாமல் இருக்கும்படி பிரதிவாதிகள் பேரில் ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை கோரியும், தாவா சொத்தின் கிழபுறமாக வாதியின் தாவா சொத்தின் வரப்புகளை பிரதிவாதிகள் தன் செலவில் இடித்து அப்புறப்படுத்திக் கொள்ளவும் அதனால் வாதிக்கு பிரதிவாதிகளால் வழங்க கோரி ஒரு செயல் உறுத்துக்கட்டளை கோரியும், தாவா செலவு தொகை கோரியும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**தாவா மதிப்பீடு விபரம்**</u> :

தாவா பரிகாரமான பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மதிப்பு ரூ.1,000/-

அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச்சட்டம் 27(c) ன்படி ரூ.30/-

தாவா 2வது செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் மதிப்பு ரூ.1,000/-

அதற்கு வாதிகள் செலுத்தியுள்ள மொத்த நீதிமன்ற கட்டணம் ரூ.60/-

மொத்த பரிகார மதிப்பு ரூ.2,000/-

அதற்கு வாதிகள் செலுத்தியுள்ள மொத்த நீதிமன்ற கட்டணம் ரூ.60/-

<u>**வழக்கு மூலம்**</u> : 12.11.2008, 05.12.2025.

<u>**வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள்**</u> : 22.01.2025, 14.02.2025.

<u>**வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் :**</u> 14.02.2025.

## <u>தீர்ப்பாணை</u>

இந்த அசல் வழக்கானது 14.02.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 03.08.2026 ஆம் தேதியன்று என் முன்னர் விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. **A. தீபிகா** அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.A.பாலசுப்ரமணி** அவர்கள் முன்னிலையாகியும், வாதி தரப்பில் எவ்வித தகவலும் இல்லை. இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் தீர்ப்பாணையை வழங்குகிறது.

1. வாதி தரப்பில் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும், வாதி தரப்பில் எவ்வித தகவலும் இல்லை. வாதி அழைக்கப்பட்டும் ஆஜராகவில்லை. வாதி வழக்கை நடத்த முன்வராததாலும், வாதியின் வருமையிமையினாலும், வாதியின் தவறுகைக்காக இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2. செலவு தொகை பற்றிய உத்தரவு இல்லை.

## சொத்து விபரம்

பழனி பதிவு மாவட்டம், கீரனூர் சார்பதிவு வட்டம், பழனி வட்டம், முத்துநாயக்கன்பட்டி கிராமம், புலத்தில் க.ச.92 காலை பு.ஹெக். ஏர்.0.59.5 க்கு பு.ஏ.1.47 உள்ள முழுப் பல புஞ்சை பூமிக்கு செக்குபந்தி.

அத்திமரத்துவலசு கிழமேல் ரோட்டுக்கும் – தெற்கு

93 நெ.காலைக்கும் B பாக பூமிக்கும் – வடக்கு

B பாக பூமிக்கும், பொது கிணற்றுக்கும் – மேற்கு

க.ச.100/2 சு.வேதம் அய்யர் வகையரா

க.ச.100/1D ப.ஈஸ்வரி பூமிக்கும் – கிழக்கு

இதன் மத்தியில் பு.ஹெக். ஏர். 0.59.5க்கு பு.ஏ.1.47 (ஒரு ஏக்கர் நாற்பத்து ஏழு செண்ட்) உள்ள புஞ்சை பூமியும்,

பின்னும் க.ச.93 நெ. காலை பு.ஹெக். ஏர் 1.29.5 க்கு பு.ஏ.3.20 மேல்புரம்

க.ச.92 நெ. காலைக்கும் – தெற்கு

அமிர்தம் வகையரா பூமிக்கும் – வடக்கு

B பாக பூமிக்கும், – மேற்கு

க.ச. 100/2 சு.வேதம் அய்யர் வகையரா பூமிக்கும் – கிழக்கு

இதன் மத்தியில் பு.ஹெக்.ஏர் 0.78.5 க்கு பு.ஏ. 1.94 (ஒரு ஏக்கர் தொண்ணூற்றி நான்கு செண்ட்) உள்ள புஞ்சை பூமியும்,

பின்னும் க.ச.91 நெ. காலையில் மேல்கோட்டில் உள்ள பொதுக்கிணறு கிணற்றடிக்கு மண் திட்டிற்காக விடப்பட்ட பு.ஹெக். ஏர். 0.05.5 க்கு பு.ஏ.0.14ல் பொதுவில் சரிபாதி பு.ஹெக். ஏர் 0.02.5 பு.ஏ.0.07 உள்ள பூமியும் ஆக மூன்று காலைகளுக்கும் சேர்ந்து ஒட்டு பு.ஹெக்.ஏர். 40.5க்கு பு.ஏ.3.48 (மூன்று ஏக்கர்

நாற்பத்தி எட்டு செண்ட்) உள்ள புஞ்சை பூமியும், ஷை க.ச.91 நெ. காலையில் உள்ள துகி.1ல் பொதுவில் சரிபாதி கிணர் பாத்தியமும் ஷை கிணற்றில் பொதுவில் சரிபாதி தண்ணீர் இறவை பாத்தியமம் ஷை கிணற்றில் வைக்கப்பட்டுள்ள 7-1/2 H.P.EMP Set 1லும் மின் இணைப்பு எண்.17ன்படி உள்ள மின் இணைப்பு ஒயர் மீட்டர் டெபாசிட் வகையராவில் பொதுவில் சரிபாதி பாத்தியமும் ஷை பூமிக்கு உண்டான மாமூல் பாத்தியங்களும் மாமூல்படியுள்ள வழி நடை தட பாத்தியங்கள் உள்பட சகிதம்.

2026ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 3-ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.08.03 15:56:45 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.